# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## O.S.No. 2/2015 (OS.30/2022)

PW1– ஜீனா                                                    நாள் 12.03.2025

**<u>3ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

கடைகளுக்கு ஏற்பட்ட மின்இணைப்புக்கான வைப்பீடு தொகை நான் தான் கட்டினேன். நான் எந்தெந்த கடைகளுக்கு வைப்பீடு செலுத்தினேன் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்திருக்கிறேனா என்று ஞாபகமில்லை. நான் வைப்பீடு தொகை செலுத்தியிருந்தால் எனக்கு ஞாபகம் இருக்கும் என்றும், வழக்கிற்காக ஞாபகமில்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. வைப்பீடு தொகையை செலுத்தவில்லை என்றால் சரியல்ல. தற்போது தாவா சொத்தில் உள்ள 2வது அயிட்ட சொத்தில் குடியிருக்கிறேன். கதவு எண்.520/இ வீட்டில் தான் குடியிருக்கிறேன். ராமகிருஷ்ணன் கதவு எண்.520/டி என்ற வீட்டில் குடியிருக்கிறார். பாலமுருகன் அவர் கட்டியுள்ள வீட்டில் குடியிருக்கிறார். அதுவும் இந்த தாவா சொத்தின் ஒரு பகுதி என்றால் சரிதான். வெங்கடேசன் தற்போது இங்கில்லை. வெங்கடேசனை கட்டாயப்படுத்தி வெளியே அனுப்பிவிட்டேன் என்றால் சரியல்ல. அவருடைய பிள்ளைகளை என்னுடன் சேர்த்துக்கொண்டு வெங்கடேசனை வெளியே அனுப்பி விட்டேன் என்றால் சரியல்ல. வெங்கடேசன் ஒரு பகுதி சொத்தை விற்றுவிட்டதாக அவரது மகன் வழக்கு போட்டுள்ளார் என்றால் சரிதான். எந்த நீதிமன்றத்தில் வழக்கு போட்டுள்ளார் என்று நினைவில்லை. நானும் சட்டம் பயின்றுள்ளேன். நான் வழக்கிற்காக எல்லா விவரங்களையும் தெரிந்து கொண்டு ஞாபகமில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் குடியிருக்கும் வீட்டின் பெரம்பலூர் சர்வே எண்.422/7பி என்றால் சரிதான். என் அம்மா கண்ணம்மா தானமாக கொடுத்த சொத்தின் மூலபத்திரங்களை தாக்கல் செய்யவில்லை. தற்போது சாட்சி நினைவில்லை என்று சொல்கிறார். எனக்கு ஆவணங்கள் பற்றி நன்கு தெரியும்என்றும், பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. கடைகளுக்கான மின்இணைப்பு எண் 1469, 1470, 1471

மற்ற கடைகளுக்கான மின்இணைப்பு எண் ஞாபகமில்லை. நான் கொடுத்த வாக்குமூலத்தில் மேற்படி எண் இல்லை என்றால் சரியல்ல. என் அப்பா உயிருடன் இருந்த காலத்தில் பெரம்பலூரில் உள்ள சொத்துக்களை மனைகளாக பிரிக்கவில்லை. என் அப்பா உயிருடன் இருந்த காலத்திலேயே சொத்துக்களை மனைகளாக பிரித்து வெங்கடேசன், பாலமுருகன் ஆகியோருக்கு பாகம் பிரித்து கொடுத்தார் என்று சொன்னால் அது நாங்கள் குடியிருக்கும் சர்வே எண் அல்ல. என் அம்மா தானமாக கொடுத்த இடத்தில் நான் கட்டிடம் கட்டியுள்ளேன். எளம்பலூர் பெரியசாமி என்பவரிடம் நிலத்தை விற்பதற்கு 25.03.2023 அன்று ஒப்பந்தம் செய்திருந்தேன் என்றால் சரிதான். அந்த ஒப்பந்தபடிக்கு கிரையம் செய்து கொடுக்கவில்லை. எனக்கு கிரையம் கொடுக்க விருப்பமில்லாததால் கிரையம் கொடுக்கவில்லை. 25.03.2023 அன்று யுவராஜ் என்பருக்கு ஒரு ஒப்பந்தம் செய்து கொடுத்தேன். அது எளம்பலூரில் உள்ள சொத்து. எனது பாகம் உள்ள சொத்து என்பதால் கிரையம் செய்தேன். பாக வழக்கு நிலுவையில் உள்ள போது சொத்தை விற்றதற்கு காரணம் என் தம்பி மகனுக்கு கேன்சர் வியாதி என்பதால் கிரையம் செய்தேன். வேறு வழியில்லாததால் விற்றேன். வெங்கடேசன் என்பவரின் மகன் என்னுடன் தான் இருக்கிறான். ரகுநாத் என்பரையும் தூண்டி வழக்கு போட செய்து அந்த வழக்கும் நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. என் கணவர் செல்வாக்கு உள்ளவர் விவரம் தெரிந்தவர் என்றால் சரிதான். நான் ஏதாவது வில்லங்கம் ஏற்படுத்தி மற்றவர்களுக்கு சொத்து கொடுக்க கூடாது என்பதற்காக இவ்வாறு செய்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

Sd/-A. Balkis, B.L.,
Principal District Judge
Perambalur.